DIOCESE OF TIRUNELVELI

# BETHESDA C.S.I. TAMIL CHURCH

PUNE

# பெதஸ்தா பேசுகிறது


## GOD'S PROMISE FOR THIS MONTH

*ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய். - உபாகமம் 28:12*

## MESSAGE FOR THE MONTH

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களுக்கு என் அன்பின் வாழ்த்துக்கள். கடந்த மாதங்களில் நம்முடைய பிள்ளைகள் சிறப்பாக தேர்வு எழுதி முடிக்க ஆண்டவர் கிருபை செய்தார். கல்லூரி தேர்வுக்காக ஆயத்தப்படுகிற, எழுதிக் கொண்டிருக்கிற பிள்ளைகளுக்காக ஜெபிப்போம். ஆண்டவர் நமது பிள்ளைகளை வெற்றி சிறக்க செய்வாராக, ஆமென்.

பிரியமானவர்களே, கர்த்தர் நம் பிதாவானவர் நம்மை சிருஷ்டித்து உருவாக்கினவர். நாம் அவருடைய பிள்ளைகள். நாம் கர்த்தருடைய குடும்பத்தில் இருக்கிறோம். அப்பா, பிதாவே! என்று அழைக்கும் இனிய உறவு முறையே நம்மை ஜெபிக்கத் தூண்டுகிறது. அநேகருக்கு கர்த்தரை எப்படி அழைப்பது என்று தெரியவில்லை. "சாமி, கடவுளே, இறைவனே, எம்பிரானே". என்று அழைக்கிறார்கள். ஆனால், இயேசு கிறிஸ்து ஜெபிக்க கற்றுக் கொடுக்கும் போது "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே" என்று அழைக்கும்படி சொன்னார். (லூக்கா: 11:2) பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக பரிசுத்த வேதாகமத்தில் பார்க்கும் பொழுது (யோவான்: 1:12).

"அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.

பாகிஸ்தானில் பில்குவான் என்ற ஒரு செல்வ சீமாட்டி இருந்தாள். அவள் பின்பற்றின மதத்திலே "கடவுள்" பயங்கரமானவர் சிறு குற்றத்திற்கும் தண்டனை கொடுப்பவர் யாரும் அவரண்டை நெருங்கி கிட்டிச் சேர முடியாது. யாரும் அவரோடு ஐக்கியம் கொள்ள முடியாது. என்றெல்லாம் அவளுக்கு போதித்திருந்தார்கள். ஆனால், ஒரு நாள் அவள் ஒரு கிறிஸ்துவ கூட்டம் நடக்கும் இடத்திற்கு வந்தாள். அங்கே கிறிஸ்தவர்களெல்லாரும் கர்த்தரை "அப்பா, பிதாவே" என்று உள்ளம் உருகி பாசத்தோடு ஜெபிப்பதைக் கண்டாள். அவளுக்கு ஆச்சரியமாகவும், அதிசயமாகவும் இருந்தது அப்பொழுது இறைவனை பாசமுள்ள தகப்பனாக அவள் கண்டாள் பரலோகத்தில் இருக்கிற என் தகப்பனே என்று அவள் சொல்லி முடிப்பதற்குள்ளாக வெள்ளம் போல தேவ அன்பும் பிரசன்னமும் அவளை மூடிக் கொண்டது அன்று அவள் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டாள்.

மலை உச்சியை நோக்கி ஒரு சிறிய புகைவண்டி வளைந்து நெளிந்து சென்று கொண்டிருந்தது. அதில் பயணம் செய்த சிறுவன் ஒவ்வொரு ஸ்டேஷனிலும் இறங்கி, இறங்கி ஏறிக் கொண்டிருந்தான். அவன் மேல் அனுதாபம் கொண்ட சில பெரியவர்கள் அவனைப் பார்த்து "தம்பி நீ கீழே இறங்குகிற நேரம் உன்னை புகைவண்டி விட்டு, விட்டு போய் விட்டால் என்ன செய்வாய்? என்று கேட்டார்கள். அவன் சொன்னான்," இதை ஓட்டுகிறவரே என் தகப்பனார்தான். அவர் என்னை ஒரு நாளும் விட்டு, விட்டு போகமாட்டார் என்றான். அன்பானவர்களே, தகப்பன் மேல் எவ்வளவு நம்பிக்கை அந்த மகனுக்கு! என் தகப்பன் என்னை கவனித்துக் கொண்டிருக்கிறார். என்னை பொறுப்பெடுப்பார் என்று விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் பரம தகப்பன் கைவிடவே மாட்டார், அவர் பாசமும், மன்துருக்கமும் வள்ளவர்.

பிரியமானவர்களே, அந்த பிதா தான் உங்களுடைய தாயின் வயிற்றிலே உங்களை உருவாக்கினவர். உங்களை அன்போடு தெரிந்து கொண்டவர். உங்களை பேர் சொல்லி அழைத்தவர் உங்களை அருமையாய் வழி நடத்தி செல்லுகிறவர். எப்போதும் "அப்பா பிதாவே" என்று சொல்லி கொண்டே இருங்கள். உங்கள் விண்ணப்பங்களையும், வேண்டுதல்களையும் அவருக்குத் தெரியப்படுத்திக் கொண்டே இருங்கள் கர்த்தர் நம்மை ஆசிர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்,

Dr. V. Samuel Jabaraj

"நம்முடைய தேவன் பரலோகத்தில் இருக்கிறார், நமக்குச் சிந்தமான யாவையும் செய்கிறார், நமக்குச் சித்தமான யாவையும் செய்கிறார்."

சங்கீதம் : 115:3

## STORY FOR THE MONTH

### *Ann Judson: 1st American Woman Missionary (1789-1826)*



Many of her friends and neighbors thought Ann was wild and romantic when she went off to India in 1812. It was unthinkable then that a young woman would travel to some little known spot on the globe to work among the heathen in primitive surroundings. It meant leaving behind her family with little hope of seeing them again in this world. But Ann Hasseltine Judson insisted on going; she knew this was the work God had called her to do.

Ann Hasseltine was born in Bradford, Massachusetts the same year the young United States began its government under the Constitution 1789. When she was a teenager Ann accepted Christ as her Savior and began to spend time in Bible study and prayer. She wanted to be used by God and prayed, Direct me in Thy service, and I ask no more. I would not choose my position of work, or place of labor. Only let me know Thy will, and I will readily comply.

What A Honeymoon! By 1810, when she was 21, Ann wanted to become a missionary to foreign lands. So did the Congregational minister named Adoniram Judson that she married on February 5, 1812; the next day, the newlyweds sailed from Salem, Massachusetts for Calcutta, India! Six other missionaries were also sent to Calcutta. At that time the government in India and the East India Company were opposed to missions, and they were soon ordered to leave the country. So the Judsons began their missionary work in Burma, located between India and China. The gospel had never reached that land of over 15 million people, and Ann prayed, O thou Light of the world, dissipate the thick darkness which covers Burma, and let thy light arise and shine. O display thy grace and power among the Burmese. Subdue them to thyself, and make them thy chosen people.

The Judsons settled in Rangoon, the principle seaport of Burma, and began learning the language. There were no rapid conversions, but Ann and Adoniram were "sensible that the hearts of the heathen, as well as those of Christians, are in the hands of God, and in his own time he will turn them unto him." The Burmans frequently told the Judsons, "Your religion is good for you, ours for us." The missionaries hoped the lives they lived would convince the Burmese people that Christianity was good for them as well. Even so, there were only eighteen converts after nine years in Rangoon.

Ann and Adoniram learned the Burmese language and translated the Scriptures. The Burmans had no idea of a God who was eternal, without beginning or end, and it was difficult to find words to accurately describe the Christian truths. Nevertheless, within three years the Judsons had prepared a Burmese grammar, printed two tracts, and translated the gospel of Matthew. Ann had formed a society of native women who met together on Sundays to pray and read the Scriptures.

Home to Recoup and Recruit. In spite of difficult living conditions, Ann came to love Burma as a place where she had learned much of the Lord’s mercy and grace. It was difficult for her to leave her adopted land in 1822, when a severe liver problem forced her to return to America. While in America, Ann wrote a history of the Burmese mission that was widely read in America and encouraged many to become missionaries. Ann awakened many to the conditions of the Burmese women and the importance of female missionaries working among them.


When Ann returned to her home in Rangoon in 1823, war between Britain and Burma was threatening. When war did break out, the Burmese thought the Americans to be associates of the British, and Adoniram was thrown into death prison. Ann, then two months pregnant, became a prisoner in the inner room of her own house. She valiantly pled with government officials for her husband' s life and was secretly able to bring supplies and food to Adoniram and his fellow prisoners.

Stand By Your Man. Shortly after their daughter was born, Adoniram caught a tropical fever. Ann devotedly cared for him from a small hut near the prison gate. One night, however, Adoniram was moved secretly to another prison. He was forced to walk barefoot eight miles over sand and gravel. The soles of his feet were raw flesh, and he was near death when he finally arrived at Oung-pen-le. Ann took her three-month-old daughter and followed after her husband. She was able to share a room with the jailer and his family, but became seriously ill herself from both smallpox and spotted fever. Ann later wrote her brother: The acme of my distress, consisted in the awful uncertainty of our final fate. My prevailing opinion was, that my husband would suffer violent death; and that I should, of course, become a slave,...But the consolation of religion, in these trying circumstances, were neither ' few nor small!' It taught me to look beyond this world, to that rest, . . . where Jesus reigns and oppression never enters.

When Burma and the British made peace, Adoniram was released and united with his wife and infant daughter. Ann, however, was still weak. She died of a fever on October 24, 1826. Her daughter died within six months. Ann Hasseltine Judson was the first woman missionary to leave America; her story of constant love for Christ encouraged many other women to serve Christ on the mission field.

## BIRTH OF A SONG
## (Composer Isaac Watts Writes Am I a Soldier of the Cross)

Isaac Watts, who wrote this hymn, was the father of hymn-writing in the English language. He was born in England. His father was not a member of the state church, and was twice thrown into jail for opposing it, so that when he was a baby his mother often carried him in her arms to visit his father in prison.




He became a minister in London. He was a little man, only about five feet tall. His health was very poor all his life, but his church took loving care of him, for he was greatly liked.

Early in life he became wearied with the versified Psalms which the churches used and set out to compose hymns of his own. This was a new departure and met with persistent opposition, but his hymns soon became widely popular in nearly all the churches.

This hymn was written by Dr. Watts in 1709, to follow a sermon on 1 Cor. 16:13, "*Watch ye, stand fast in the faith, quit you like men, be strong*."

## ARTICLES FOR THE MONTH
## *நமது சுத்திகரிப்புக்கென்றே சூழ்நிலைகளை தரும் தேவன்!*

*- சகரியா பூணன்*

***யோபு*** *தன் எல்லாக் குழந்தைகளையும், சகல சொத்துக்களையும் ஒரே நாளில் இழந்தான். ஆயினும் தேவனைப் பணிந்துகொள்வதிலும், கீழ்படிவதிலும் அவன் தவறவில்லை (யோபு 1:20-22). அவனுக்கிருந்த சகலமும்-குழந்தைகள், சொத்துக்கள் ஏன் அவனது உடல் ஆரோக்கியம் கூட* ***தேவன் இலவசமாய் கொடுத்த பரிசுகள்*** *என அவன் அறிந்திருந்தான். தேவன் விரும்பினால், அவைகளை எடுத்துக்கொள்ள அவருக்கு எல்லா உரிமையுமுண்டு. ஒருவன் எல்லாவற்றையும் விட்டு விடாவிட்டால், அதாவது* ***தனக்குச் சொந்தமானது என்ற அதிகாரத்தை விட்டுவிடாவிட்டால்***, *தேவனை மெய்யாக ஆராதிக்க முடியாது என்பதை யோபு அறிந்திருந்தான்.*



*தேவன், சாத்தானை மேலும் ஒருபடி முன்சென்று யோபுவை தலை முதல் பாதம் வரை கொடிய பருக்களால் வாதிக்க அனுமதித்தார். சாத்தானிடமிருந்துதான் நோய் வருகிறது. ஆயினும் தேவன் அதைத் தமது தாசர்களுக்கு பரிசுத்தமாக்குதலுக்கும், பரிபூரணமாக்குதலுக்கும் பயன்படுத்த முடியும். பவுலை உபத்திரவப்படுத்த, அவர் மாம்சத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டிருந்தது. அதை 'சாத்தானின் தூதன்' என்று குறிப்பாக அவர் கூறுகிறார். அது தேவ தூதன் அல்ல. . . சாத்தானின் தூதன்! இருப்பினும், தேவன் அதை நீக்காமல், பவுல் திரும்ப திரும்ப ஜெபித்தும்கூட தொடர்ந்து இருக்க அனுமதித்தார். ஏனெனில், அது* ***பவுலை தாழ்மையுள்ளவனாகக்*** *காக்கும்*

*நோக்கத்திற்காகவே பயன்பட்டது (2 கொரி. 12:7-9).*

*யோபுவை அவனது மனைவியின் மூலம் உபத்திரவப்படுத்துவது, சாத்தானின் மூன்றவாது படி! உங்கள் மனைவி உங்களுக்கு விரோதமாகத் திரும்பி உங்களைக் குற்றப்படுத்தும்போது, அது உண்மையில் உங்கள் பரிசுத்தமாகுதலுக்கு உள்ள சோதனையாகிட முடியும். தேவ வசனம் புருஷர்களுக்குக் கொடுக்கும் கட்டளையாவது, அவர்கள் எந்தச் சூழ்நிலையிலும் தங்கள் மனைவிமார்களைக் கசந்து கொள்ளாமல், எந்த சமயத்திலும் கிறிஸ்து சபையை நேசிப்பது போல அவர்களை நேசிக்க வேண்டும் என்பதேயாகும் (கொலோ 3:19; எபே 5:25). உங்களுக்கு சங்கடமான மனைவி வாய்த்திருந்தால், வாழ்வில் உங்களுக்கு கிடைத்திருக்கும் பங்கைக் குறித்து* ***குறை சொல்லாமலும்****, தெய்வீக குணமுடைய மனைவிமார்களைப் பெற்றிருக்கும் மற்றவர்கள் மீது* ***பொறாமை கொள்ளாமலும்****, உங்களுக்கு வாய்த்திருக்கும் சூழ்நிலைகள் உங்களைப் பரிசுத்தமாக்குவதற்கான வழி என்றே கருதலாம்! உங்கள் மனைவி உங்களிடம் சத்தமிடும்போதும், குற்றங்கூறுகிற போதும்.... பொறுமையாய் சகித்த கிறிஸ்துவின் பிரதிநிதியாய் நீங்கள் ஆவதற்கு தகுதியுள்ளவரோ? என தேவன் சோதித்துப்பார்க்கிறார் (மாற்கு 3:21).*

*சாத்தானின் நான்காவது படி, யோபுடைய போதக நண்பர்கள் மூலம் யோபுவைக் குற்றப்படுத்தியதாகும்! இது மற்ற எல்லாவற்றையும் காட்டிலும் ஓர் பலத்த அடி! தேவனுடைய தீர்க்கதரிசிகள் போல, அந்த நண்பர்கள் யோபுவினுடைய நோய் படுக்கையில் வந்து, அவனுடைய எல்லா நோய்க்கும் காரணம் யோபுவின்* ***அந்தரங்கப் பாவங்கள்தான்*** *என்று கூறியபோது, யோபுவுக்கு மிகவும் சஞ்சலமாயிருந்தது. இந்த நண்பர்கள், அவர்களை அறியாமலே, சகோதரர்களைக் குற்றஞ்சாட்டுகிற சாத்தானுடைய கையாளாக நடந்து கொள்கிறார்கள் என்பதை அவர்கள் கொஞ்சமும் உணரவில்லை (வெளி 12:10). இந்த அக்கினி உலையிலும், நான்* ***சுத்த பொன்னாக*** *மாறுவேன் என்றே யோபு அறிக்கை செய்தான். இவ்வாறாக தேவன், யோபு பரிசுத்தமாகும்படிக்கே சகலத்தையும் அனுமதித்தார்! அதே செயலைத்தான், இன்றும் தன் தாசர்களுக்கு தேவன் தொடருகிறார்!!*

## BIBLE QUIZ FOR THE MONTH
## வேதாகமப் பகுதி : விடுதலை பயணம் *11 to 30* வரை,

*1. சீனாய் மலையில் மோசே பேசியபொழுது கடவுள் எவ்வாறு விடையளித்தார்?*

- ☐ *இடிமுழக்கத்தில் விடையளித்தார்*
- ☐ *நெருப்பில் இருந்து இறங்கி வந்து விடையளித்தார்*
- ☐ *எக்காள சத்தத்தோடு விடையளித்தார்*

*2. இதுவரை இருந்திராததும் இனி இருக்கப்போகாததுமான பெரும் புலம்பல் எகிப்து நாடெங்கும் கேட்கும், ஏன்?*

- ☐ *இஸ்ரவேலர் எகிப்தைவிட்டு புறப்பட்டதால்*
- ☐ *பார்வோனின் தலைமகன் முதல் மாவரைக்கும் அடிமைப்பெண்ணின் தலைமகன் வரை இறந்து விடுவர் என்பதால்*
- ☐ *ஆண்டவர் இஸ்ரவேலரையும், எகிப்தியரையும், வேறுபடுத்தி செயலாற்ற போவதால்*

*3. உடன்படிக்கை பேழையின் நீளம்,அகலம்,உயரம்,எவ்வளவு?*

- ☐ நீளம் இரண்டரை முழம்,அகலம் ஒரு முழம்,உயரம் ஒரு முழம்
- ☐ நீளம் ஒன்றரை முழம்,அகலம் இரண்டரை முழம்,உயரம் ஒரு முழம்
- ☐ நீளம் இரண்டரை முழம்,அகலம் ஒன்றரை முழம்,உயரம் ஒன்றரை முழம்.

*4. மிரியாம் கஞ்சிரா கொட்டி பல்லவியாக பாடிய பாட்டு யாது?*

- ☐ ஆண்டவரே,தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் எவர்?
- ☐ குதிரையையும்,குதிரை வீரனையும் கடலுக்குள் மூழ்கடித்தார்
- ☐ உம் மாபெரும் மாட்சியால் உமது எதிரிகளை தகர்த்தெரிந்தீர்

*5. அறுவடை விழா என்றால் என்ன?*

- ☐ உழைப்பின் பயனை ஒன்று சேர்ப்பது
- ☐ கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்துக்கு கொண்டு வருவது
- ☐ வயலில் விதைத்து பயிராகும் உழைப்பின் முதல் விளைச்சல் ஆகும்

*6. இஸ்ரயேல் மக்கள் எகிப்து நாட்டில் எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தனர்?*

- ☐ 430 ஆண்டுகள்.வாழ்ந்தனர்
- ☐ 400 ஆண்டுகள் வாழ்ந்தனர்
- ☐ 410 ஆண்டுகள் வாழ்ந்தனர்

*7. ஒரு செக்கேல் என்பது எவ்வளவு?*

- ☐ 20 கேரா
- ☐ 10 கேரா
- ☐ 2 கேரா

*8. "மாசா" என்று பெயரிட்டு அழைக்கப்பட்டது ஏன்?எதனால்?*

- ☐ இஸ்ரயேல் மக்கள் அந்த இடத்தில் வாதாடியதால்
- ☐ ஆண்டவர் தம்மோடு இருக்கிறாரா?இல்லையா?என்று சோதித்ததால்
- ☐ பாறையில் இருந்து தண்ணீர் வந்ததால்

*9. இன்று நீங்கள் காணும் எகிப்தியரை இனிமேல் என்றுமே காணப்போவதில்லை. இது யாருடைய கூற்று?*

- ☐ ஆண்டவர்

- ஆரோன்
- மோசே

*10. தீர்ப்பு கூறும் மார்புப் பட்டை எவ்வாறு அமைய வேண்டும்?*

- கற்களை வரிசையாக அதின்மேல் பதிக்க வேண்டும்
- கலை வேலைப்பாட்டுடன் அமைய வேண்டும்.
- கருஞ்சிவப்பு,சிவப்பு நிற நூலால் முறுக்கேற்றி அமைக்க வேண்டும்

*11. தூயகத்தையும்,திருத்தூயகத்தையும் பிரிப்பது எது?*

- தொங்குதிரை
- உடன்படிக்கை பேழை
- இரக்கத்தின் இருக்கை

*12. வானத்திலிருந்து அப்பத்தை பொழியச் செய்த ஆண்டவர் இஸ்ரயெல் மக்களை எவ்வாறு சோதித்தார்?*

- ஆறாம் நாளில் இரண்டு மடங்கு சேகரிக்க வேண்டும்.
- ஏழாம் நாளில் சேகரிக்க வேண்டும் என்று கட்டளை கொடுத்தார்
- தேவையான அப்பத்தை அன்றன்று சேகரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார்

*13. வானத்தில் இருந்து பேசிய ஆண்டவர் எவைகளை கட்டளையாக கொடுத்தார்?*

- என் பெயரை நினைவுப்படுத்திச் செய்யும் எல்லாவற்றிலும் நான் உங்களை ஆசீர்வதிப்பேன்.
- நானே உன் கடவுளாகிய ஆண்டவர்
- எந்த சிலையையும் உருவாக்க வேண்டாம்

*14. தனி ஆளாக இப்பணியை உம்மால் செய்ய இயலாது,என்று யார் யாரிடம் கூறியது?*

- கடவுள் மோசேயிடம் கூறியது
- மோசேயின் மாமனார் மோசேயிடம் கூறியது
- மோசே ஆரோனிடம் கூறியது

*15. பலிபீடம் -------------------------- மிக்கதாகும்.பலிபீடத்தை தொடுவதெல்லாம் -------------------------------- பெறும்*

- திருப்பொழிவு, அர்ப்பணம்
- அன்றாட வழிபாடு,தூய்மை
- தூய்மை,புனிதம்

***Send the Answers to***
***contactus@csitamilchurchpune.org***
***And win fabulous prizes***
***by 15th May'16***